**ஒபெக் நிதியளிக்கப்பட்ட வீதி வலையமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டம் - 2016**

ஒபெக் நிதியளிக்கப்பட்ட வீதி வலையமைப்பு அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2016 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்திற்கும் (ஓஎவ்ஐடி) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 ஒத்தோபர் 08 ஆந் திகதிய 1452பி இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளது. இலங்கையின் அபிவிருத்திக் கொள்கை மாதிரிவேலையின் ஒன்றிணைந்த பகுதியாக மேற்கொள்ளல் மற்றும் மேல், வடமேல், மத்திய, தென் மற்றும் சபரகமுவ மாகாணங்களில் தேசிய நெடுஞ்சாலைகளின் 202 கிலோமீற்றரை தரமுயர்த்துதல் அதேபோல் பாலங்களின் மீள்நிர்மாணம் மற்றும் அகலமாக்கல் மூலம் போக்குவரத்து துறையில் துரிதமாக அதிகரிக்கின்ற தேவையை எதிர்கொள்வதற்கு வீதி வலையமைப்பு இணைப்பை முன்னேற்றுவதை இலக்காக கொள்ளல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 7,092.77 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 62.21 மில்லியனானதுடன் அதில் ரூபா 4,560 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 40 மில்லியன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 சனவரி 16 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2017 டிசெம்பர் 31 ஆந் திகதி அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால்

பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன்கள் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2016 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2016 டிசம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதி அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட தேவைகளின் பிரகாரம் மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதரவாக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மீது (எஸ்ஓஈ) நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ளலாம் என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின்போது மற்றும் 2016 டிசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2016 ஆம் ஆண்டின் போது | | 2016 டிசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஓஎவ்ஐடி | 40.00 | 4,560.00 | 1,000 | 5.90 | 860.46 | 30.65 | 4,299.57 |
| இலங்கை அரசாங்கம் | 22.21 | 2,532.77 | 100 | - | 62.63 | - | 159.27 |
| | 62.21 | 7,092.77 | 1,100 | 5.90 | 923.09 | 30.65 | 4,458.84 |

### 3.2 பௌதிக செயன்முன்னேற்றம்

செயற்திட்டத்தின் வேலைத்திட்டத்தின் பிரகாரம், மத்திய, தென், சபரகமுவ, மேல் மாகாணங்களில் உள்ள 63.89 கிலோ மீட்டர் நீளமான 07 தேசிய வீதிகளினதும் சபரகமுவ மாகாணத்தில் கேகாலை - பொல்கஹவல வீதியில் உள்ள 3/2 ஆம் இலக்கப் பாலத்தினதும் புனரமைப்பு வேலைகள் நிறைவேற்றப்படுவதற்கிருந்தன எவ்வாறாயினும், 2016 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு சபரகமுவ மற்றும் மேல் மாகாணங்களின் 36.57 கிலோ மீட்டர் நீளமான 03 வீதிகளது புனரமைப்பு வேலைகள் நிறைவடைந்திருந்தன. பேராதனை - பதுளை - செங்கலடி வீதியில் 0+420 கிலோ மீட்டர் முதல் 3+050 கிலோ மீட்டர் வரையிலான பிரிவினது புனரமைப்பு செயற்திட்ட நடவடிக்கைகளது ஒப்பந்தம் ஆரம்பத்

தினத்திலிருந்து 41 மாதகால தாமதத்தின் பின்னர் 2017 யூன் 02 ஆந் திகதியன்றே வழங்கப்பட்டிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

ஆரம்ப கட்டத்திலேயே பொல்கஹவல - கேகாலை வீதியின் 11.7 கிலோ மீட்டர் துாரத்தின் புனரமைப்பு வேலைகளுக்கான தேவை இனங்காணப்பட்டு அதன் பொருட்டு வீதி அளவைக் கட்டணம் மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு போன்றவற்றிற்கு ரூபா 2.02 மில்லியன் செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 2017 யூன் 30 ஆந் திகதியிலேனும் வீதியின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படாதிருந்தன.

### 3.4 சர்ச்சைக்குரிய விடயங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புனரமைக்கப்பட்ட வீதிகள் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு 2015 செப்டம்பர் 26 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்தபோதும், காலி - தெனியாய - மாதம்பே வீதி மற்றும் இறக்குவானை முதல் மாதம்பே வீதி என்பவற்றினது புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்த ஒப்பந்தகாரர் 2016 செப்டம்பர் 28 ஆந் திகதியன்று ரூபா 245 மில்லியனை மேலதிகமாகக் கோரியிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், 2016 யூன் 30 ஆந் திகதியளவில் உசாத்துணைச் சேவைகளுக்கான ஒப்பந்தமும் நிறைவடைந்திருந்தது.

(ஆ) முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி குறித்த செயற்திட்டத்தால் ஆட்சேர்க்கப்பட்ட உள்ளூர் உசாத்துணையாளர்களுக்கான சம்பளம் மற்றும் படி என்பவற்றை ஈடுசெய்வதற்கு மற்றுமொரு செயற்திட்டத்திற்கு ரூபா 1.55 மில்லியன் மாற்றம் செய்யப்பட்டிருந்தது.